தினமணி

## கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரிப்பு

First Published : 01 Aug 2010 01:16:13 AM IST



வயலில் கரும்பு வெட்டும் இயந்திரம். கரும்பு சோகைகளை சிறிய துண்டுகளாக்கி உரமாக்கும் இயந்திரம்.

கடலூர், ஜூலை 31: தமிழகத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு இந்த ஆண்டு கணிசமாக அதிகரித்து உள்ளதாக தெரியவந்துள்ளது.

÷கரும்பு விலை டன்னுக்கு ரூ. 2 ஆயிரம் என தமிழக அரசு அறிவித்துள்ளதாலும், 10-20 சதவீதம் இயந்திரங்களைப் பயன்படுத்தி கரும்பு நடவு, களை எடுத்தல், கரும்பு சோகையை துண்டுகளாக்கி உரமாக்குதல் போன்றவை குறைந்த செலவில் நடைபெறுவதாலும், இந்த பரப்பளவு அதிகரித்துள்ளதாக வேளாண்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

÷தமிழகத்தில் கடந்த ஆண்டு 9 புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்கப்பட்டு உள்ளன. இவை நாளொன்றுக்கு 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் டன் வரை கரும்பு அரைக்கும் திறன் கொண்டவை.

÷இவற்றையும் சேர்த்து தற்போது, தமிழகத்தில் 44 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் 3 ஆலைகள் இயங்கவில்லை. இயங்கும் 41 சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன், நாளொன்றுக்கு 1.18 லட்சம் டன்கள்.

÷தமிழகத்தில் 5 லட்சம் விவசாயிகள் கரும்பு பயிரிடுகிறார்கள். கரும்புக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல் இருந்ததால் முந்தைய 5 ஆண்டுகளில், தமிழகத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு 40 சதவீதம் அளவுக்குக் குறைந்தது.

÷மேலும் விவசாயத் தொழிலில் நிலவி வரும் ஆள்பற்றாக்குறையும் மின்வெட்டும் தமிழக கரும்பு விவசாயத்தை பாதிக்கத் தொடங்கியது.

÷அக்டோபர் மாதம் தொடங்க இருக்கும் நடப்பு ஆண்டு கரும்பு அரவைப் பருவத்துக்கு, கரும்பு விலை, வண்டி வாடகையையும் சேர்த்து, டன்னுக்கு ரூ. 2 ஆயிரம் என தமிழக அரசு அறிவித்து உள்ளது.
÷கடந்த ஆண்டு கரும்பு விலை டன்னுக்கு ரூ. 1,537-1,540 வரை இருந்தது. எனவே கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு விலை கூடுதலாகவும், காலதாமதமின்றி முன்னரே அறிவிக்கப்பட்டதாலும், விவசாயிகளிடையே கரும்பு பயிரிடும் ஆர்வம் அதிகரித்து உள்ளது.
÷இதன் விளைவாக தமிழகத்தில் சென்ற ஆண்டு 3.20 லட்சம் ஹெக்டேராக இருந்த கரும்பு சாகுபடி பரப்பளவு, இந்த ஆண்டு 3.40 லட்சம் ஹெக்டேராக அதிகரித்து உள்ளது. ÷கடலூர் மாவட்டத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு கடந்த ஆண்டு 30,221 ஹெக்டேராக இருந்தது இந்த ஆண்டு 34 ஆயிரம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.
÷கடந்த ஆண்டு இந்தியாவில் உள்ள சர்க்கரை ஆலைகளில் சராசரியாக 130 நாள்கள் மட்டுமே கரும்பு அரவை நடைபெற்றது. ஆனால் தமிழகத்தில் 170 நாள்கள் அரவை நடைபெற்றது.
÷நடப்பு ஆண்டில் தமிழக சர்க்கரை ஆலைகளில் 170 நாள்கள் கரும்பு அரவை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
÷கடலூர் மாவட்டத்தில் பெண்ணாடம் சர்க்கரை ஆலை, கடந்த ஆண்டு 6.72 லட்சம் டன் கரும்பு அரைத்தது. இந்த ஆண்டு 8.5 லட்சம் டன்னுக்கு மேல் அரைக்க உத்தேசித்து உள்ளது.
÷நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை கடந்த ஆண்டு 9.23 லட்சம் கரும்பு அரைத்தது. இந்த ஆண்டு 12 லட்சம் டன் அரைக்க திட்டமிட்டு உள்ளது.
÷விவசாயத் தொழிலில் ஏற்பட்டு வரும் ஆள் பற்றாக்குறை, கரும்பு விவசாயத்தை பெரிதும் பாதித்தது. கரும்பு வெட்டுக் கூலியாக மட்டும் டன்னுக்கு ரூ. 400 முதல் ரூ. 800 வரை கொடுக்க வேண்டியது இருக்கிறது.
÷ஆனால் இப்பிரச்னையில் இருந்து தமிழக விவசாயிகள், இயந்திரமயமாதல் மூலம் தற்போது விடுபடத் தொடங்கி இருக்கிறார்கள். கரும்பு வெட்டும் இயந்திரங்களை அனைத்து சர்க்கரை ஆலைகளும் வாங்கி வைத்து, விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி வருகின்றன. இதனால் வெட்டுக்கூலி டன்னுக்கு ரூ. 200 ஆக்க குறைந்து இருக்கிறது.
÷மேலும் கரும்பு நடவு, களை எடுத்தல், கரும்பு சோகையை துண்டுகளாக்கி உரமாக்குதல் போன்ற கருவிகளையும், சொட்டு நீர்ப்பாசன முறைகளையும் விவசாயிகள் பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள்.
÷இதனால் கரும்பு விவசாயத்தில் செலவு குறையத் தொடங்கி இருக்கிறது. இயந்திரங்களின் பயன்பாடு 10 முதல் 20 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது.
÷இது குறித்து கரும்பு விவசாயிகள் கூட்டமைப்பின் மாநில செயலர் விருத்தகிரி கூறுகையில், "விவசாய உற்பத்தி 1.6 சதவீதத்துக்குக் குறைந்து விட்டது. விவசாய உற்பத்தியைப் பெருக்க

இயந்திரமயமாதல் கட்டாயம் ஆகிவிட்டது. இயந்திரங்களின் விலை அதிகமாக உள்ளது.  கரும்பு அறுவடை இயந்திரத்தின் விலை ரூ. 1.5 கோடி வரை உள்ளது.
÷தொழில்துறைக்கு அரசு பல சலுகைகளை அளிப்பதுபோல், வேளாண் இயந்திரங்களுக்கு விற்பனை வரி, சுங்கவரி, இறக்குமதி வரி உள்ளிட்ட அனைத்து வரிகளையும் ரத்து செய்ய வேண்டும்.
÷÷விவசாய நிலங்கள் அளவு குறுகி இருப்பதும் இயந்திரங்களை பயன்படுத்த தடையாக இருக்கிறது. எனவே விவசாயிகள் கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு மாறியாக வேண்டும் என்றார்.

**விவசாயிகளின் கவனத்திற்கு; தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு செடி, உரம் இலவசம்**
First Published : 01 Aug 2010 12:04:27 AM IST



உளுந்தூர்பேட்டை, ஜூலை 31: தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய செடி, உரம் இலவசமாக வழங்கப்படும் என்று திருநாவலூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் பி.சுமதி கூறியுள்ளார்.
÷இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்: மாற்றுப் பயிர் சாகுபடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் இத்தருணத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.
÷இந்நிலையில் திருநாவலூர் ஒன்றிய தோட்டக்கலைத்துறை மூலம் 2010-11-ம் ஆண்டுக்கு தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் மா 1 ஹெக்டேர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு செடி மற்றும் உரம் உள்பட ரூ.9900-ம், முந்திரி ஒரு ஹெக்டேருக்கு செடி மற்றும் உரம் உள்பட ரூ.11500-ம், கொய்யா பயிர் செய்ய ஒரு ஹெக்டேருக்கு செடி மற்றும் உரம், பூச்சி மருந்து உள்பட 18800-ம், வாழை ஒரு ஹெக்டேருக்கு பயிர் செய்ய உரம் மற்றும் பூச்சி மருந்து உள்பட ரூ.7500-ம், மிளகாய் பயிர் செய்ய ஒரு ஹெக்டேருக்கு விதை மற்றும் உரம், பூச்சி மருந்து உள்பட ரூ.11500-ம் மற்றும் சம்மங்கி பூ சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு ரூ.45000-ம் வழங்கப்பட்டு வருகிறது.

÷மேலும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் வெண்டை, கத்தரி, பூசணி, மிளகாய் விதைகளும், வீட்டு காய்கறி தோட்டத்துக்கு காய்கறி விதை பாக்கெட்களும் விற்பனைக்கு உள்ளது. தேவையான விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உதவி தோட்டக்கலை அலுவலர்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

**முந்திரி சாகுபடியில் புதிய தொழில்நுட்பம்: அரசு மானியம்**

First Published : 01 Aug 2010 12:02:00 AM IST



பண்ருட்டி, ஜூலை 31: முந்திரி சாகுபடியில் குறைந்த செலவில், அதிக மகசூல் மற்றும் லாபம் பெற அரசு மானியத்துடன், புதிய தொழில்நுட்பத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

÷அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

÷தரிசு நிலத்தின் தங்கம் எனப்படும் முந்திரி பண்ருட்டிக்கு அதிக அளவில் அந்நிய செலவாணியை ஈட்டிக்கொடுத்து, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ளது. தற்போது முந்திரி சராசரி மகசூல் ஹெக்டருக்கு 700 கிலோ என்ற அளவில் உள்ளது. இது தேசிய சராசரியை ஒப்பிடும் போது மிகவும் குறைவு. முந்திரியில் ஹெக்டருக்கு 2000 கிலோ மகசூல் எடுக்க கீழ்க்கண்ட புதிய தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டும்.

÷ஒட்டு முந்திரி கன்றுகளை (வி.ஆர்.ஐ.3), 5மீ ல 4மீ இடைவெளியில் ஹெக்டருக்கு 500 கன்றுகள் வீதம், ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் நடவு செய்ய வேண்டும். நடவு குழியில் மேல் மண்ணுடன் 10 கிலோ மக்கிய தொழு உரம், 1 கிலோ வேப்பம் பிண்ணாக்கு கலந்து குழியை நிரப்ப வேண்டும். 3 முதல் 6 மாதம் வயதுள்ள கன்றுகளை மட்டும் நடவு செய்ய வேண்டும். நடவின் போது ஒட்டு கட்டியப் பகுதி தரைமட்டத்தில் இருந்து 5 செமீ மேலேயும், அப்பகுதி உடையாமலும், நேராகவும் வளர திடமான ஊன்று குச்சிகளை நட்டு கயிற்றால் கட்ட வேண்டும்.

÷பண்ருட்டி வட்டாரத்தில் புதிய பரப்பில் ஒட்டு முந்திரி பயிர் செய்தால் ஹெக்டருக்கு முதல் வருடம் ரூ.19,710-க்கு தோட்டக்கலை பண்ணையில் இருந்து முந்திரி செடிகளும், தமிழ்நாடு அரசு டான்கோப் மூலம் இடுபொருள்கள், நடவு மற்றும் பராமரிப்பு செலவும் வழங்கப்படும்.

÷மேற்கண்ட முறையில் முந்திரி நடவு செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள் தங்கள் பகுதி உதவி தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். மேலும் பண்ருட்டி எல்.என்.புரத்தில் உள்ள வேளாண்மைத் துறை வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்

அலுவலகத்தில் விவசாயிகள் தேவை பதிவேடு பராமரிக்கப்படுகிறது. இதில் முன்பதிவு செய்து பயனடையும்படி வி.ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

**சம்பா சாகுபடிக்கான விதை நெல், விற்பனைக்கு தயார்**

First Published : 01 Aug 2010 12:01:00 AM IST



சிதம்பரம், ஜூலை 31: சிதம்பரம், பின்னத்தூர், பரங்கிப்பேட்டை வேளாண்மை விரிவாக்க அலுவலகங்களில் சம்பா சாகுபடிக்கான விதை நெல் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளது என வேளாண் உதவி இயக்குநர் இ.தனசேகர் தெரிவித்துள்ளார்.

÷இது குறித்து அவர் தெரிவித்தது: சிதம்பரம், பின்னத்தூர், பரங்கிப்பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் சம்பா பருவத்துக்கேற்ற தரமானச் சான்று விதை நெல் ரகங்களான பொன்மணி (இத 1009), பி.பி.டி. 5204, மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி, ஆடுதுறை 39, ஆடுதுறை 45 ஆகிய ரக விதை நெல்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

÷ஒருங்கிணைந்த தாயி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.5 மானியத்தில் தற்போது விதை நெல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பு.முட்லூர், கீழமணக்குடி, புதுச்சத்திரம், பூவாலை மற்றும் பரங்கிப்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் சம்பா பருவத்துக்கேற்ற பி.பி.டி. 5204 நெல் விதை ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மானியத்தில் தற்போது விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

÷எனவே விவசாயிகள் தங்களுக்கு தேவையான நெல் விதைகளை தங்களுக்கு அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையம் அல்லது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிப் பயன்பெறுமாறு வேளாண் உதவி இயக்குநர் இ.தனசேகர் தெரிவித்துள்ளார்.

**வேளாண்மை செயல்விளக்கப் பயிற்சி**

First Published : 01 Aug 2010 12:07:39 PM IST

தேனி, ஜூலை 31: சின்னமனூர் அருகில் காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையத்தில், வாழை அடர்நடவு முறை குறித்து,பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மாணவியருக்கு செயல் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழக மண்டலத் திட்ட இயக்குநர் எஸ். பிரபுகுமார் , மாணவியருக்கு துல்லியப் பண்ணையம், சொட்டுநீர்ப் பாசனம், நீர்வழி உரமிடல் ஆகியவற்றின் பலன்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

**கால்நடைகள் வளர்ப்போர் கவனத்துக்கு...**

First Published : 01 Aug 2010 12:31:48 PM IST

திருத்துறைப்பூண்டி, ஜூலை 31: திருத்துறைப்பூண்டி பகுதியில் ரோட்டரி சங்கமும், கால்நடை பராமரிப்புத் துறையும் இணைந்து, வரும் 2-ம் தேதி தொடங்கி 22ஆம் தேதி வரையிலான இலவசக் கால்நடை சிகிச்சை முகாமை நடத்தவுள்ளன.

முகாம் நடைபெறும் தேதி, இடங்கள் குறித்த விவரங்கள்:

2-ல் விட்டுக்கட்டி, மடப்புரம், 3-ல் வேளூர், தண்டலைச்சேரி, 4-ல் மணலி, 5-ல் மேலமருதூர், 9-ல் நெடும்பலம், 10-ல் சேகல், 16-ல் பிச்சனகோட்டகம், 18-ல் எழிலூர், 19-ல் நுணக்காடு, 20-ல் கொத்தமங்கலம், 21-ல் கட்டிமேடு, 22-ல் ஆதிரங்கம் ஆகிய இடங்களில் இந்த முகாம்கள் நடைபெறுகின்றன.

இந்த முகாமில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, சினை பரிசோதனை, குடல்புழு நீக்கம் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

கால்நடை வளர்ப்போர் இந்த இலவச முகாம்களில் கலந்துகொண்டு, தங்களது கால்நடைகளுக்கு சிகிச்சை பெறலாம் என ரோட்டரி சங்க திட்ட இயக்குநர் சதா. பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளின் கவனத்திற்கு... தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு செடி, உரம் இலவசம்**

First Published : 01 Aug 2010 10:28:18 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூலை 31: தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய செடி, உரம் இலவசமாக வழங்கப்படும் என்று திருநாவலூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் பி.சுமதி கூறியுள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்: மாற்றுப் பயிர் சாகுபடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் இத்தருணத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

÷இந்நிலையில் திருநாவலூர் ஒன்றிய தோட்டக்கலைத்துறை மூலம் 2010-11-ம் ஆண்டுக்கு தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் மா 1 ஹெக்டேர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு செடி மற்றும் உரம் உள்பட ரூ.9900-ம், முந்திரி ஒரு ஹெக்டேருக்கு செடி மற்றும் உரம் உள்பட ரூ.11500-ம், கொய்யா பயிர் செய்ய ஒரு ஹெக்டேருக்கு செடி மற்றும் உரம், பூச்சி மருந்து உள்பட 18800-ம், வாழை ஒரு ஹெக்டேருக்கு பயிர் செய்ய உரம் மற்றும் பூச்சி மருந்து உள்பட ரூ.7500-ம்,

மிளகாய் பயிர் செய்ய ஒரு ஹெக்டேருக்கு விதை மற்றும் உரம், பூச்சி மருந்து உள்பட ரூ.11500-ம் மற்றும் சம்மங்கி பூ சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு ரூ.45000-ம் வழங்கப்பட்டு வருகிறது.
÷மேலும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் வெண்டை, கத்தரி, பூசணி, மிளகாய் விதைகளும், வீட்டு காய்கறி தோட்டத்துக்கு காய்கறி விதை பாக்கெட்களும் விற்பனைக்கு உள்ளது. தேவையான விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உதவி தோட்டக்கலை அலுவலர்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

**விவசாயிகளுக்கு மின்மோட்டார் வழங்கும் போது தரம் உறுதி செய்யப்பட வேண்டும்**
First Published : 01 Aug 2010 09:39:14 AM IST

நாமக்கல், ஜூலை 31: விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் வழங்கும்போது அதன் தரத்தை உறுதி செய்ய வேண்டும் என ஆட்சியர் சகாயம் அறிவுறுத்தினார்.
நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் சனிக்கிழமை நடந்தது. இக் கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் சகாயம் பேசியது: விவசாயிகளுக்காக அரசு வழங்கும் மானிய உதவிகளும், சலுகைகளும் தகுதியான நபர்களுக்கு விடுபடாமல் சென்று சேர்ப்பதில் வேளாண்மைத் துறை அலுவலர்கள் தீவிரமாக பணியாற்ற வேண்டும். அரசின் திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் எந்திரங்கள் வழங்கும்போது அவை தரமானதாகவும், உறுதியானதாகவும் உள்ளதா என்பதை ஆய்வு செய்து அதன் பிறகே விவசாயிகளுக்கு வழங்குவதற்கு பரிந்துரை செய்ய வேண்டும். குறிப்பாக பழைய மின்மோட்டார்களுக்காக புதிய மின்மோட்டார்களை மாற்றித்தரும்போது தரம் அவசியமானது. விவசாயிகளுக்கு தேவையான விதை நெல் தடுப்பாடின்றி கிடைத்திட அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் எப்போதும் இருப்பு வைத்திருக்க வேண்டும்.
நவீனதொழில்நுட்பங்களை புகுத்தி சாகுபடி முறையை எளிதாக்கி அதிக லாபம் ஈட்டுதல் குறித்து பயிற்சி அளிப்பதுடன், அவற்றை பின்பற்றவும் ஊக்குவிக்க வேண்டும். விவசாயிகளிடம் இருந்து வருவாய்த் துறையினர் பெறுகின்ற பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு அகற்றுதல் குறித்த மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.
மாவட்ட வருவாய் அலுவலர் கி. சாந்தி, வேளாண்மை இணை இயக்குநர் ஏ. பிரபாகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ராஜா, பயிற்சி துணை ஆட்சியர் கவிதா மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**சிறுபாக்கம், வேப்பூர் விவசாயிகள்மஞ்சள் விளைவிப்பதில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2010,23:52 IST

சிறுபாக்கம்:வேப்பூர், சிறுபாக்கம் விவசாயிகள் போதிய விலை கிடைக்கும் மஞ்சள் பயிரை விளைவிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.வேப்பூர், சிறுபாக்கம் உட்பட சுமார் 100 கிராமங்களைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களின் பண தேவைகளுக்காக நீர்ப்பாசன நிலங்களில் ஒரு ஏக் கர் முதல் இரண்டு ஏக்கர் வரை மஞ்சள் பயிர்களான சேலம் 1, ஈரோடு 2, பனங் காளி, எருமதாளி, நுர ஆகிய மஞ்சள் ரக பயிர்களை விளைவித்து வந்தனர்.கடந்த ஆண்டு ஈரோடு மற்றும் சேலம் மஞ்சள் மார்க்கெட்டுகளில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு குவிண்டால் 15 ஆயிரம் முதல் 18 ஆயிரம் ரூபாய் வரை நல்ல விலைக்கு எடுக்கப்பட்டது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் குவிண்டாலுக்கு 16 ஆயிரம் வரை மஞ்சளுக்கு விலை வழங்கப்பட்டு வருகிறது.இதனால் வேப்பூர், சிறுபாக்கம் பகுதிகளில் மஞ்சள் விளைவித்த 30 சதவீத விவசாயிகளை தொடர்ந்து தற்போது 90 சதவீத விவசாயிகள் மஞ்சள் பயிர் விளைவிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**முந்திரி உற்பத்தி குறைந்ததால் கிலோவிற்கு ரூ.10 உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,00:03 IST

பண்ருட்டி:பண்ருட்டி பகுதியில் முந்திரி உற்பத்தி குறைந்ததால் தற்போது முந்திரி பயிர் ஒரு கிலோவிற்கு 10 ரூபாய் விலை உயர்ந் துள்ளது.பண்ருட்டி பகுதியில் 20 ஆயிரம் எக்டர் நிலப் பகுதியில் பயிரிடப்பட் டுள்ள முந்திரி மரங்களில் இந்த ஆண்டு பருவ மாற்றத்தின் காரணமாக முந்திரி உற்பத்தி கடுமையாக குறைந்தது. அதனால் தற்போது 80 கிலோ எடை கொண்ட முந்திரி கொட்டை மூட்டை 4,100 ரூபாயில் இருந்து 4,300 ஆகவும், ஆப்பிரிக்கா ஐவேரி ரக இறக்குமதி கொட்டைகள் 3,300ல் இருந்து 3,700ஆக உயர்ந்துள்ளது.அதுபோல் முந்திரி பயிர் ரகங்களும் ஒரு கிலோவிற்கு சராசரியாக 10 ரூபாய் விலை கூடியுள்ளது. 240 ரகம் 330 ரூபாயில் இருந்து 340ம், 320 ரகம் 300லிருந்து 315ம், ஜே.எச் ரகம் 260லிருந்து 270ம், எஸ் ரகம் 255லிருந்து 260ம், பட்ஸ் ரகம் 220லிருந்து 230ம், கே ரகம் 218ம், எல்.டபில் யூபி 220 ஆகவும், எஸ்.டபிள்யூபி ரகம் 190ம், ஆவர÷ஜ் பயிர் 240 ஆகவும் உயர்ந் துள்ளது. தற்போது இந்தோனியா இறக்குமதி கொட்டைகள் வெகுவாக உயர்ந்துள்ளதால் உள் ளூர் முந்திரி கொட்டைகளும் 5,000ரூபாய்க்கு மேல் உயரும் என வியாபாரிகள் கூறுகின்றனர்.

**தர்மபுரி உழவர் சந்தையில், காய்கறி விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,02:20 IST

தர்மபுரி: தர்மபுரி உழவர்சந்தையில் காய்றிகள் விலை வீழ்ச்சியால் பொதுமக்கள் கூட்டம் நேற்று அலைமோதியது.

தர்மபுரி உழவர்சந்தைக்கு தினமும் சராசரியாக 18 முதல் 20 டன் காய்றிகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இரு மாதமாக துவக்கத்தில் மழையில்லாமல் காய்கறிகள் விளைச்சல் குறைவாக இருந்தது. அதனால், காய்கறிகள் விலை "கிடுகிடு'வென உயர்ந்தது. தற்போது பருவமழை ஒரளவு பெய்து வருவதோடு குளிர்காற்று அடிக்கிறது. இதானல், காய்கறிகள் விளைச்சல் அதிகமாக உழவர்சந்தைக்கு வரத்து அதிகமாகி உள்ளது.

தர்மபுரி உழவர்சந்தைக்கு நேற்று 22 டன் காய்கறிகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். காய்கறிகள் வரத்து அதிகமானதால், விலை குறைந்தது. காய்கறிகள் வாங்குவதற்கு பொதுமக்கள் குவிந்தனர். நீண்டவரிசையில் காத்து நின்று காய்கறிகளை போட்டி போட்டு வாங்கி சென்றனர்.

**மானிய விலையில் விதை விநியோகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,02:59 IST

மண்ணச்சநல்லூர்: "மண்ணச்சநல்லூர் விவசாயிகளுக்கு சம்பா பருவ சாகுபடிக்காக மானிய விலையில் நெல் விதைகள் விற்பனை செய்யப்படுகிறது,' என மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) ரெங்கராஜன் தெரிவித்துள்ளார். அறிக்கையில் உள்ளதாவது:சம்பா பருவ சாகுபடிக்கு தேவையான நெல் விதைகள் மே.வெ.பொன்னி, பி.பீ.டி.5204, கே7.43, ஆடுதுறை 39, அம்பா சமுத்திரம் 19 ரக சான்று பெற்ற நெல் விதைகள் மண்ணச்சநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.விதை கிராம திட்டத்தின் கீழ் 50 சதவீத மான்ய விலையிலும், ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் கிலோவுக்கு ஐந்து ரூபாய் விலையிலும், மான்யமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. உயிர் உரங்கள், சூடோமோனாஸ், நுண் சத்துக்கள், விநியோகம் செய்யப்படுகிறது. 50 சதவீத மான்ய விலையில் ஸ்பிரேயர் வழங்கப்படுகிறது.விவசாயிகள் இவற்றை மானிய விலையில் பெற்று பயனடைய வேண்டும்.இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை இயக்கத்தில் பல்வேறு பணிகள்திருச்சி மாவட்டத்தில் ரூ.5.28 கோடி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,02:57 IST

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் நடப்பு 2010-11ம் நிதியாண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பல்வேறு திட்டப் பணிகளுக்கு ஐந்து கோடியே 28 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.திட்டத்தில் செய்யப்படும் பணிகள் விபரம்:தோட்டக்கலை பயிர்களை பரப்பை அதிகரித்தல்: பரப்பை அதிகரிக்க மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படவுள்ளது. மா பயிருக்கு ஹெக்டேருக்கு 9,900 ரூபாய் மதிப்பிலும், நெல்லிக்கு 10 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பிலும், வாழைக்கு 16 ஆயிரத்து 875 மதிப்பிலும், மஞ்சலுக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பிலும் நடவுப்பொருட்கள், இடுபொருட்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.முந்திரி சாகுபடி பரப்பு அதிகரித்தல்: முந்திரி சாகுபடி ஹெக்டேருக்கு 12 ஆயிரம் ரூபாய் மதிப்பு நடவுப்பொருள், இடுபொருட்கள் வழங்கப்படும்.

தோட்டக்கலை சிறப்புத் திட்டங்கள்: தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து உற்பத்தி திறனை பெருக்கும் நோக்கோடு, மோட்டார் பொருத்திய எந்திரங்கள், விசைத்தெளிப்பான் போன்ற கருவிகள் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.அறுவடை செய்த விவசாய பொருட்களை விஞ்ஞான முறையில் சேமித்து வைக்க 300 மெ.டன் கொள்ளளவு உள்ள குளிர்சாதன கிடங்குககள் அமைக்க 1.20 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். அறுவடை பொருட்களை பண்ணை அளவில் சேமித்துக் கொள்ள 54 சதுர மீட்டர் அளவுள்ள சிப்பம் கட்டும் அறை கட்டுவதுக்கு விவசாயிகளுக்கு தலா 1.5 லட்சம் ரூபாய் மானியம் வழங்கவும் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இத்திட்டத்தில் விவசாயிகள் மானியம் பெற சொந்த நிலம் உடையவராக இருக்க வேண்டும். ஒரு விவசாய குடும்பத்துக்கு நான்கு ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படும். விவசாயிகள் கன்றுகள், இடும்பொருட்களை பெறும்போது தனது சொந்த செலவிலேயே எடுத்துச் செல்ல வேண்டும். திட்டத்தில் உதவி இயக்குநர்களை அணுகி முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.சிறப்பு திட்டங்களில் பங்குபெற விருப்பமுள்ள விவசாயிகள் திட்ட அறிக்கை தயாரித்து, சம்பந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் மூலம் மாவட்ட இயக்கக் குழுவின் முன் அனுமதி பெற்று பணியினை துவங்க வேண்டும்.எனவே, தேசிய தோட்டக்லை இயக்கத் திட்டத்தின் பயன்களை பெற விவசாயிகள் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி முன்பதிவு செய்துகொள்ளும் படி மாவட்ட கலெக்டர் (பொ) ராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெண்டிபாளையம், பாசூரில் மின் உற்பத்தி பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,03:06 IST

ஈரோடு: வெண்டிபாளையம், பாசூரில் 800 கோடி ரூபாய் செலவில் 60 மெகாவாட் மின் உற்பத்தி, சில மாதங்களில் துவங்கும் நிலையில் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

காவிரியாற்றில் பி.பி., அக்ரஹாரம் உட்பட ஐந்து இடங்களில் கதவணை தடுப்பு மின் உற்பத்தி நிலையம் உள்ள நிலையில், வெண்டிபாளையம், பாசூரில் தலா 400 கோடி ரூபாய் மதிப்பில் கதவணை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி இரண்டாண்டாக நடந்து வருகிறது. வெண்டிபாளையத்தில், 95 சதவீத பணிகள் முடிந்த நிலையில், வரும் அக்டோபர் மாதத்துக்குள் பணிகளை முடித்து மின் உற்பத்தி துவங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கதவணை ஈரோடு மாவட்டம் வெண்டியபாளையத்துக்கும் நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தும் இடையே அமைக்கப்படுகிறது. ஆற்றில் 18 ஷட்டர்கள் அமைத்து, மின் உற்பத்தி நிலையத்துக்கு ஆற்று நீர் திருப்பி விடப்படுகிறது. மின் உற்பத்தி நிலையத்தில், தலா 15 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் இரண்டு அமைக்கப்பட்டு, 30 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆற்றில் நடுவே 13 மீட்டர் அகலமும், 18 மீட்டர் உயரத்திலும் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. வெண்டிபாளையம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து, பள்ளிபாளையம் காவிரிக் கரை வரை பாலத்தில் 18 ஷட்டர்கள் அமைத்து, மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மின் உற்பத்திக்காக ஆற்றின் நடுவே அமைக்கப்படும் பாலம், வாகன போக்குவரத்துக்கும், பொதுமக்கள் பயன்பாடுக்கும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்படுகிறது. மின் உற்பத்தி நிலையத்தில், மின் உற்பத்திக்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. அக்டோபர் மாதம் மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதேபோல், பாசூரிலும் 400 கோடி ரூபாய் மதிப்பில், கதவணை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படுகிறது. காவிரியாற்றில் பாசூர் - சோழசிராமணி இடையே அமைக்கப்படுகிறது. இப்பகுதியில் காவிரியாற்றில் இரு கரைகளும் சற்று குறுகலாக உள்ளதால், வெண்டிபாளையத்தை விட சற்று சிறிய கதவணையாக அமைக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, சோழசிராமணி கரையில் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு, பாசூர் வரை 16 ஷட்டர்களுடன் கூடிய பாலம் அமைக்கப்படுகிறது. மின் உற்பத்தி நிலையத்தில் 15 மெகாவாட் மின் உற்பத்தி திறன் உள்ள இரண்டு மின் உற்பத்தி இயந்திரங்கள் அமைக்கப்படுகிறது. பாலம் பணி 90 சதவீதம் வரை முடிவடைந்த நிலையில் மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி இயந்திரம்

பொறுத்துவதற்கான பணிகள் நடந்து வருகிறது. அணையில் பணிகள் முடிய ஓராண்டாகும் என தெரிகிறது.

**காலிங்கராயனில் தண்ணீர் திறப்பு: நெல் சாகுபடி பணிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,03:14 IST

ஈரோடு: காலிங்கராயன் வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து, நெல் சாகுபடிக்கு உழவு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

காலிங்கராயன் வாய்க்காலில், 11.64 கோடி ரூபாய் செலவில் சீரமைப்பு பணிகள் நடந்தன. ஆறு கி.மீ., தூரம் உள்ள மாமரத்து பாளையத்திலிருந்து வைராபாளையம் வரை வலது கரையில் கான்கிரீட் தடுப்பு சுவர் அமைக்கப்பட்டது. காலிங்கராயன் பாளையத்திலிருந்து, 54 மைல் தூரமுள்ள ஆவுடையார்பாளையம் வரை வாய்க்காலில் பழுதான மதகுகள் சீரமைக்கப்பட்டன. சீரமைப்பு பணிகளால் வழக்கம் போல் வாய்க்காலில் பாசனத்துக்கு ஜூன் 16ம் தேதி தண்ணீர் திறக்கவில்லை. பணிகள் முடிந்து ஜூலை 11ம் தேதி, வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டது. வாய்க்கால் முழுவதும் ஆகாயத்தாமரை செடிகள் அதிகளவு ஆக்கிரமித்ததால், துவக்கத்தில் 200 கன அடி தண்ணீர் மட்டும் வாய்க்காலில் திறக்கப்பட்டது. ஆகாயத்தாமரை செடிகள் அகற்றப்பட்ட பின்னர், 600 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. சீரமைப்பு பணிகள் முடிந்து, தண்ணீர் திறக்கப்பட்டதால் வாய்க்காலில் ஓரளவு தெளிந்த நிலையில் முழு கொள்ளளவுடன் தண்ணீர் செல்கிறது.

தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டதால், விவசாயிகள் சென்ற வாரம் முழுவதும், உழவுக்காக வயலில் தண்ணீரை தேக்கினர். பி.பி., அக்ரஹாரம், வைராபாளையம், கருங்கல்பாளையம் பகுதிகளில் நெல் நடவு செய்ய வயலில் நாற்றாங்கால் அமைத்துள்ளனர். டிரில்லர் மூலம் உழவுப்பணி தீவிரமாக நடந்து வருகிறது. பி.பி., அக்ரஹாரம், வைராபாளையம், கருங்கல்பாளையம், வெண்டிபாளையம் பகுதிகளில் நெல் சாகுபடிக்கான ஆயத்த பணிகள் நடந்து வருகிறது. மஞ்சள் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்ததால், கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் கூட சாவடிபாளையம்புதூர், கணபதிபாளையம், பாசூர், ஊஞ்சலூர் பகுதிகளில் அதிகளவு, மஞ்சள் சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சாவடிபாளையம் புதூரை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது: காலிங்கராயன் வாய்க்காலில் சீரமைப்பு பணிகள் நடந்த போதும், முழுமையாக கழிவுநீர் கலப்பது நிற்கவில்லை. 80 சதவீதம் தான் தண்ணீர் சுத்தமாக உள்ளது.

தாமதமாக தண்ணீர் திறந்ததால், மஞ்சள் விலை வரலாறு காணாத வகையில், உயர்ந்து வருவதால், அதிகளவு மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சென்ற மாத துவக்கத்தில் தொடர்ந்து கன மழை பெய்ததால், மஞ்சள் நடவு செய்ய நிலத்தை முன்னதாகவே

உழவு செய்து தயாராகிவிட்டோம். தண்ணீர் திறந்ததும் நடவு பணியில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**சம்பா பருவ சாகுபடிக்கு கோ 43: வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,02:49 IST

தஞ்சாவூர்: ""பயிர் பாதுகாப்பு முறைகளுடன் சம்பா பருவத்தில் கோ 43 ரகத்தை பயன்படுத்துங்கள்,'' என வேளாண் இணை இயக்குனர் லோகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.அறிக்கையில் உள்ளதாவது:கடந்த 2009 சம்பா பருவத்தில் பூதலூர், திருவையாறு, தஞ்சை யூனியனில் கோ 43 ரகத்தில் நெற்பழநோய், பூஞ்சானம் காரணமாக மகசூல் இழப்பு ஏற்பட்டது. சில விவசாயிகள் நாற்றுவிட விதைகளை முளைக்கட்டும் போதில் இருந்து உரிய விதை நேர்த்தி, பூக்கும் பருவத்தில் உரிய பயிர் பாதுகாப்பு மருந்து உபயோகித்ததில் செய்ததால் நோய் தாக்குதல் இல்லாமல் தப்பினர்.இதுபற்றி, வேளாண் இணை இயக்குனர் தலைமையில் வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து, நடப்பு சம்பா பருவத்தில் உயர் பயிர்பாதுகாப்பு முறைகளுடன் கோ 43 ரகத்தை சாகுபடி செய்யலாம், என அறிவுறுத்தப்படுகிறது.

கடந்தாண்டு பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பெறப்பட்ட விதைகளை பயன்படுத்தாதீர். சூடோமோனாஸ் உயிரியல் மரந்தை ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் என்ற விகிதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். இது பாக்டீரியா சம்மந்தப்பட்ட நோயை தடுக்கும். அல்லது பெவிஸ்டின் மருந்தை ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.நடும் முன் ஒரு கிலோ சூடோமோனாஸ் மணலில் அல்லது மக்கிய குப்பை எருவுடன் கலந்து நிலத்தில் இட்டு நடவு செய்ய வேண்டும். பயிர் பூக்கும் தருவாயிலும், பால் பிடிக்கும் தருவாயிலும் காப்பர் ஹைட்ராக்ஸைடு ஏக்கருக்கு 500 கிராம் அல்லது புரோபோகோனோஸால் ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து மாலைவேளையில் தெளிக்க வேண்டும். பொட்டாஷ் உரத்தை மேலுரமாக இட வேண்டும். தழைச்சத்து அதிகம் இடக்கூடாது.இம்முறையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மூலம் நெற்பழம், பாக்டீரியா தாக்குதல், இலைக்கருகல் நோய் கோ 43 ரகத்தில் வருவதை தடுக்கலாம். நடப்பு சம்பாவுக்கு 250 டன் கோ 43 சான்று பெற்ற விதை நெல் வேளாண் துறை மூலம் விநியோகம் செய்ய உள்ளது. விதைநெல் வாங்கும்போது சூடோமோனாஸ் உயிரியல் மருந்து கட்டாயம் பெற்று விதை நேர்த்தி செய்ய வேண்டும்.தனியார் கடைகளில் நேரடியாக கோ 43 விதை நெல் வாங்கும் விவசாயிகள் தனியாரிடமோ, இலுப்பக்கோரை டான்வேப் மகளிர் குழு (மொபைல் 9843867547) அல்லது துவரங்குறிச்சி டான்வேப் மகளிர் குழு (04373 283057) ஆகியோரிடம் சூடோமோனாஸ் பெற்று விதை நேர்த்தி செய்து பயனடையலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மரவள்ளி தேமல் நோய் பாதிப்பு தோட்டக்கலை துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,02:37 IST

குளித்தலை: தோகமலை யூனியன் பகுதியில் அதிகரிக்கும் மரவள்ளி பயிர் தேமல் நோயை கட்டுப்படுத்த, வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.உதவி இயக்குனர் சிந்தாமணி வெளியிட்ட அறிக்கை:தோகமலை யூனியன் பகுதி கழுகூர், தோகமலை, பச்சனம்பட்டி, கல்லடை, கூடலூர், வடசேரி, கள்ளை, பொருந்தலூர் கிராமங்களில் மரவள்ளி 147 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இறவை சாகுபடியில் ஹெக்டேருக்கு 10 முதல் 11 டன் வரை மகசூல் கிடைக்கும்.மரவள்ளியில் சொட்டு நீர்பாசன முறையில் அதிக மகசூல் கிடைக்கும். தற்போது 2 அல்லது மூன்றாம் பருவத்தில் பயிரில் தேமல் நோய் தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. நோய் பாதிக்கப்பட்ட செடிகளில் இருந்து மற்ற செடிகளுக்கு வெள்ளை ஈக்கள் நோயை பரப்புகின்றன.ஈக்கள் இலையில் உள்ள சாற்றை உறிஞ்சுவதால் மஞ்சள் நிறம் அடைந்து வெள்ளை நிறமாக மாறிவிடுகிறது.  மகசூல் பாதிக்கும் நிலை உருவாகும். தேமல் நோயை கட்டுப்படுத்த நோய் தாக்காத செடிகளில் இருந்து நடவுக் குச்சிகளை தேர்வு செய்ய வேண்டும். செடிகளுக்கு இடையே உள்ள களைகளை அப்புறப்படுத்த வேண்டும்.தழைச்சத்து அதிகளவில் இடாமல் அளவாக பயன்படுத்த வேண்டும். நோய் பாதித்த செடிகளை கண்டுபிடித்து அழிக்க வேண்டும். "மீதைல் டெமெட்டான்' இரண்டு மி.லி., ஒரு லிட்டர் தண்ணீர் அல்லது வேம்பு எண்ணெய் ஐந்து மி.லி., லிட்டர் தண்ணீருடன் கலந்து நோய் பாதிக்கப்பட்ட செடிகளில் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இதன் மூலம் வெள்ளை ஈ பரவாமல் நோயை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு கூறப் பட்டுள்ளது.

**கோகோ சாகுபடியில் ஹெக்டருக்கு ரூ.1.65 லட்சம் கூடுதல் வருவாய்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2010,23:38 IST

பொள்ளாச்சி:தென்னையில் கோகோ ஊடுபயிராக சாகுபடி செய்தால் ஒரு ஹெக்டருக்கு ஆண்டுக்கு 1.65 லட்சம் ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று ஆழியாறில் நடந்த விழாவில் தெரிவிக்கப்பட்டது.தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகம், காட்பரி நிறுவனம் இணைந்து ஆழியாறு நகர் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில், தமிழகத்தில் நிலையான கோகோ சாகுபடி உற்பத்தி திட்டத்தை துவங்கியது. தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் ஊடுபயிராக கோகோ நடவு செய்யப்பட்டது.தமிழ்நாடு வேளாண் பல்கலை தோட்டக்கலை கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்து பேசும்போது, "கோகோ சாகுபடி மூலம் தென்னை விவசாயிகளுக்கு

கூடுதல் வருவாய் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. இது பற்றியும், அதன் தன்மை, செயல்பாட்டை ஆராய்வதற்கு ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம் சிறந்து இடமாக இருக்கும். இங்கு உருவாக்கப்படும் கோகோ கன்றுகள் தரமானதாகவும், உயர் விளைச்சல் கொண்டதாகவும் இருக்கும்' என்றார்.

தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் ராஜமாணிக்கம், தென்னை சாகுபடியில் ஏற்படும் இழப்புகளை தவிர்க்க கோகோ ஊடுபயிராக சாகுபடி செய்ய வேண்டும் என்று பேசினார்.காட்பரி நிறுவனத்தின் அறிவுரையாளர் பெல்லி பேசும்போது, கோகோவுக்கு சிறந்து சந்தை வாய்ப்பு உள்ளது. ஊடுபயிராக கோகோ பயிரிட்டால் ஒரு ஹெக்டருக்கு குறைந்தபட்சம் 1.65 லட்சம் ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும். அதனால் தென்னை விவசாயிகள் கோகோ சாகுபடி திட்டத்தை துவங்க வேண்டும் என்றார்.தோட்டக்கலைக்கல்லூரி வாசனை மற்றும் மலைப்பயிர் துறை தலைவர் ஜான்சிராணி பேசும்போது, கோகோ ஊடுபயிர் செய்வதன் மூலம் தென்னைக்கு சிறந்த இயற்கை உரம் கிடைக்கிறது. வரும் ஆண்டுகளில் கோகோ பயிரானது தென்னையை விட சிறப்பானதாகவும், விவசாயிகளுக்கு வருமானம் தரக்கூடிய பயிராகவும் இருக்கும் என்றார்.காட்பரி நிறுவன தமிழக மேலாளர் ராஜேஸ், பயிர் நோயியல் துறை இணை பேராசிரியர் ஷீலா, உழவியலர் துறை உதவி பேராசிரியர் வாசுகி ஆகியோர் பேசினர்.

**"தென்னைக்கு புது எதிரி: விவசாயிகள் உஷார்'**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2010,23:46 IST

கோவை:""தென்னையின் குருத்து ஓலைகளை தாக்கும் புதிய வகை பூச்சி குறித்து விவசாயிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்," என்று, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி அறிவுறுத்தினார். "தென்னையின் குருத்து ஓலைகளை தாக்கும் புதிய வண்டு' பற்றிய விழிப்புணர்வு கூட்டம், கோவை வேளாண் பல்கலையில் நடந்தது.

இக்கூட்டத்தில் துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:

பப்பாளி மாவுப்பூச்சி, கரும்பு அசுவுணி, தென்னை ஈரியோபைட் சிலந்தி போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண் பல்கலை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. தற்போது, தென்னை குருத்து ஓலைகளை இலை வண்டுகள் தாக்கி வருகின்றன. தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மியான்மர், சீனா, மலேசியா, சிங்கப்பூர், கம்போடியா, லாவோஸ் மற்றும் மாலத் தீவுகளில் இந்த பூச்சி காணப்படுகிறது. இந்தியாவின் தென் பகுதிகளுக்கு மாலத்தீவிலிருந்து இலங்கை வழியாக இப்பூச்சி வருவதற்கு வாய்ப்பு உள்ளது. மியான்மர் நமது நாட்டுக்கு அருகே உள்ளதால் இந்தியாவுக்குள் இப்பூச்சி வர வாய்ப்புகள் அதிகம்.இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி

கூறினார்.பெங்களூருவைச் சேர்ந்த தேசிய வேளாண் சார் பூச்சி நிறுவன இயக்குனர் ரபீந்திரா பேசியதாவது:இலை வண்டுகள் அதிக பாதிப்பு ஏற்படுத் துபவை. தொடர்ச்சியாக இளம்கன்றுகளை தாக்கினால் பட்டுப்போய் விடும். தென்னை குடும்பத்தை சேர்ந்த எண்ணெய் பனை, பனை மரம், பாக்கு மரம், ராயல் பனை, சீனா விசிறி பனை, கலிபோர்னியா விசிறி பனை போன்ற 20 வகை பயிர்களை தாக்குகின்றன. தென்னையை அதிகளவில் தாக்குகிறது. காவி கலந்த சிவப்பு நிறம் உடைய இந்த வண்டு, தென்னை ஓலைகளில் வாழ்க்கை நடத்துகிறது. இதன் வாழ்க்கை பருவம் ஐந்து முதல் ஏழு வாரங்கள். இரவில் மட்டுமே தென்னையை தாக்கும். வளர்ந்த வண்டுகள் மூன்று மாதம் வரை உயிர் வாழக் கூடியது. இதன் தாக்குதல் எட்டு ஓலைகளில் காணப்பட்டால் அது மகசூலை கடுமையாக பாதிக்கும். 10 வயதுடைய தென்னை மரங்களை அதிகமாக தாக்குகிறது. தாக்கப்பட்ட தென்னங்கன்றுகள், மற்றும் அலங்கார பனைகளை இறக்குமதி செய்யும்போது வண்டுகள் பரவும்.
இவ்வாறு, ரபீந்திரா பேசினார்.பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ஜோனத்தன் பேசுகையில், ""பூச்சி தென்பட்டவுடன் விவசாயிகள் உடனடியாக அருகில் உள்ள அரசு வேளாண் துறை அலுவலகம் அல்லது வேளாண் பல்கலை ஆராய்ச்சி நிலையம் அல்லது வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ள வேண்டும்,'' என்றார்.பூச்சியில் துறை தலைவர் கருப்புசாமி, கோவை இணை வேளாண் இயக்குனர், துணை வேளாண் இயக்குனர் மற்றும் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வேளாண் அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

**தென்னையின் ஊடுபயிராக கோ கோ: விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,02:40 IST

சோழவந்தான் : தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிடுவதில் சோழவந்தான் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். சோழவந்தான் பகுதிகளில் தென்னந்தோப்புகள் அதிகமாக உள்ளன. பல ஆண்டுகளாக சிலந்திபேன் பூச்சி தாக்குதலால் ஏராளமான தென்னை மரங்கள் பட்டு போயின. நஷ்டம் அடைந்த விவசாயிகள் கவலை அடைந்தனர். பல விவசாயிகள் வருமானத்தை பெருக்க, தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக வாழை பயிரிட்டனர். தற்போது தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு, "கோகோ' பயிர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. சோழவந்தான், குருவித்துறை, மண்ணாடிமங்கலம், தென்கரை, ஊத்துக்குழி, நாராயணபுரம், காடுப்பட்டி, கருப்பட்டி பகுதிகளில் "கோகோ' பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

விவசாயிகள் கருணாகரன், மணிவேல் கூறுகையில், "வாடிப்பட்டி தோட்டக்கலைத்துறை, காட்பரீஸ் நிறுவனம் மூலம் இலவசமாக கோகோ கன்று வழங்குகிறது. ஒரு ஏக்கரில், தென்னை

மரங்களுக்கு இடையே 10 அடி இடைவெளி விட்டு ஊடுபயிராக 200 கன்றுகள் வீதம், இருபது ஏக்கருக்கு மேல் கோகோ நடப்பட்டுள்ளது. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தென்னைக்கு தண்ணீர் பாய்ச்சும்போது, கோகோ பயிருக்கும் கிடைக்கிறது, மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஒரு கன்றுக்கு 25 மில்லி கிராம் உரம் இடுவதால் நன்கு வளர்ச்சி அடையும். இரண்டறை ஆண்டிற்கு பின் பலன்தரும்' என்றனர். வாடிப்பட்டி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராமலிங்கம் கூறுகையில், "இப்பயிரில் நோய்,பூச்சி தாக்குதல் இல்லை, களை அழிக்கப்படுகிறது என்றார்.

**குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,01:04 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் வடகால் குறுவைசாகுபடிக்கு தண்ணீர் திறக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அதிமுக., விவசாய அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.தூத்துக்குடி மாவட்ட அதிமுக., விவசாய அணி நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டம் தூத்துக்குடியில் நடந்தது.செயல்வீரர்கள் கூட்டத்திற்கு விவசாயப் பிரிவு தலைவர் துரைகோவிந்தராஜன் தலைமை வகித்தார். விவசாயப்பிரிவு செயலாளர் சோழன் பழனிச்சாமி கலந்து கொண்டு பேசினார். தூத்துக்குடி மாவட்ட அதிமுக., செயலாளர் பள்ளத்தூர் முருகேசன் கலந்துகொண்டு பேசினார். கூட்டத்தில் தூத்துக்குடி வடகால் குறுவை சாகுபடிக்கு திமுக அரசு தண்ணீர் திறந்து விடாததால் 15 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. திமுக அரசு உடனடியாக குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடவேண்டும். தூத்துக்குடி ஸ்பிக் உரத்தொழிற்சாலை கடந்த மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு உரத்தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.மேலும் ஸ்பிக் உரத்தொழிற்சாலையை உடனடியாக திறந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களை காப்பாற்ற அரசு முன் வரவேண்டும். தூத்துக்குடி மாவட்ட விவசாய பாசன குளங்கள் மற்றும் நிலங்களில் திமுக.,வினர் ஆழ்துளை கிணறுகளை அமைத்து குடிநீரை உறிஞ்சிவிற்பனை செய்துவருவதால் விவசாயம் மற்றும் மக்கள் குடிநீர் ஜீவதாரம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் ஆழ்துளை கிணறு அமைத்து நீரை உரிஞ்சி விற்பனை செய்து வருபவர்கள் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரசு விதிகளை மீறி ஆற்றுப்படுகைகளில் ஆற்று மணலை அள்ளிவருவதால் விளை நிலங்கள் மற்றும் மக்களின் ஜீவாதாரமான குடிநீருக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சண்முகநாதன், அக்கிரிபெருமாள், ஏரல் ரமேஷ், ரவீந்திரன், ஏசாத்துரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பட்டு வளர்ப்புக்கு, பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2010,02:06 IST

கிருஷ்ணகிரி: வேப்பனப்பள்ளி அடுத்த ஆவல்நத்தம் கிராமத்தில் பட்டு வளர்ச்சி துறை சார்பில் பட்டு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் கோலப்பாபிள்ளை தலைமை வகித்தார். ஆத்மா திட்ட தலைவர் பைரேசன் முன்னிலை வகித்தார். பட்டு வளர்ச்சி ஆய்வாளர் ரங்கநாதன் முன்னிலை வரவேற்றார்.
போலுப்பள்ளி மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி டாக்டர் மாசிலாமணி, வெண் பட்டு வளர்ப்பில் இளம் புழு வளர்ப்பின் முக்கியத்துவம், பட்டுக்கூடு அறுவடைக்கு பின்பற்றவேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார்.
பட்டு விசாயிகளுக்கு, பட்டு வளர்ச்சிக்காக அரசு மூலம் செயல்படுத்தப்படும் உதவிகள் குறித்து விளக்கி கூறப்பட்டது. ஆத்மா திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பட்டு மருந்துகள் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை குணசேகரன், செல்வம், நாராயணசாமி , அகோரம் ஆகியோர் செய்திருந்தனர். விருப்பசந்திரம் இளநிலை பட்டு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

தினத் தந்தி

## *தமிழகத்தில் விவசாய நிலம் குறைந்தாலும் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால் உற்பத்தி அதிகரித்து உள்ளது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் பேச்சு*




கருத்தரங்கில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேசபூபதி பேசியபோது எடுத்த படம்.

தாராபுரம், ஆக.2–

தமிழகத்தில் விவசாய நிலம் குறைந்தாலும், புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால் உற்பத்தி அதிகமாகி உள்ளது என்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவிந்தாபுரம் பசுமை கிராமம் அரிமா சங்கம், மான்சாண்டோ இந்தியா லிட் மற்றும் அமராவதி பி.ஏ.பி. பாசன சங்கங்கள் சார்பில், தாராபுரம் அருகே உள்ள கோவிந்தாபுரம் பாப்பனூத்தில் வேளாண்மை தொழில்நுட்ப கருத்தரங்கு நடைபெற்றது. கோவிந்தாபுரம் பசுமை கிராம அரிமா சங்க தலைவரும், அமராவதி பாசன தலைமை சபை விவசாயிகள் சங்க தலைவருமான பார்த்தசாரதி, மான்சாண்டோ இந்தியா லிட் மண்டல இயக்குனர் ஞானபுகழேந்தி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பி.ஏ.பி. புத்தூர் பாசனசபை விவசாயிகள் சங்க தலைவர் கல்யாணராகவன் வரவேற்றார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேசபூபதி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

உற்பத்தி பெருகி உள்ளது

நமது நாடு சுதந்திரம் பெற்றதும், நாட்டின் முன்னேற்றத்துக்காக 5 ஆண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டது. இதில் முதல் 2 ஐந்து ஆண்டு திட்டங்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்றாலும், 3–வது ஐந்து ஆண்டு திட்டத்தில் பசுமை புரட்சி உருவானது. இந்த திட்டத்தில் தான் ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1970–ம் ஆண்டில் 28 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் 47 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது 19.6 லட்சம் ஹெட்டேர் நிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டாலும், புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதால் உற்பத்தி பெருகி உள்ளது. இதனால் 68 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

சந்தைப்படுத்துதல்

துல்லிய கரும்பு பண்ணை திட்டத்தின் மூலம் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செம்மை கரும்பு சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு 300 கிலோ விதையே போதுமானது. அதில் 249 டன் கரும்பு எடுக்க முடியும். கரும்பு உற்பத்தியில் பிரேசில் உலகத்திலேயே முதல் இடத்தை பெற்றுள்ளது. தமிழகம் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது. இன்னும் நாம் இன்னும் அதிகமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் உலகத்திலேயே முதல் இடத்தை பெற முடியும்.

விவசாயிகள் எவ்வளவு பொருட்களை உற்பத்தி செய்தாலும் அதை சந்தைப்படுத்தினால்தான் லாபம் பெற முடியும். உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு விவசாயிகள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வியாபார நோக்கத்துடன் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். எங்களது பல்கலைக்கழகம் சார்பில், 1 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு 13 முக்கியமான சந்தைகளின் விலையை எஸ்.எம்.எஸ். மூலம் தெரிவித்து வருகிறோம். இதனால் பல விவசாயிகள் பயன் அடைந்து வருகிறார்கள்.

மக்காச்சோளம்

நெல், கோதுமைக்கு அடுத்தப்படியாக மக்காச்சோளம் உள்ளது. மக்காச்சோளத்தை பயிர் செய்யும் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம். இதை உணவுக்காகவும், கால்நடைகளுக்காகவும், தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தி வருவதால் தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. தற்போது குவிண்டால் ரூ.1,050– க்கு விற்பனை செய்யப்பட்டாலும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ரூ.850–ல் இருந்து ரூ.900 வரை விற்பனையாகும். எனவே மக்காச்சோளம் பயிர் செய்து விவசாயிகள் லாபம் பெறலாம். மக்காச்சோள உற்பத்தியில் அமெரிக்கா முதலிடம் பெற்று உள்ளது. உலகில் உற்பத்தி செய்யப்படும் மக்காச்சோளத்தில் 20 சதவீதத்தை அமெரிக்கா உற்பத்தி செய்கிறது. சீனா 15 சதவீதமும், பிரேசில் 4 சதவீதமும், இந்தியா, மெக்சிகோ ஆகிய நாடுகள் 3 சதவீதமும் மக்காச்சோளத்தை உற்பத்தி செய்து வருகிறது.

குளிர்பதன கிடங்கு

இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அதிக அளவில் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்வதால், குளிர்பதன கிடங்கு அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். பல்லடம் அருகே உள்ள பொங்கலூரில் 50 ஆயிரம் டன் அளவு கொண்ட குளிர்பதன கிடங்கு ரூ.2 கோடியில் அமைக்கப்பட்டு வருகிறது. அது இன்னும் 6 மாதத்தில் தொடங்கப்பட்டு விடும்.

இந்த பகுதியில் இருந்து பொங்கலூருக்கு 30 கி.மீ. தூரம் உள்ளதால் இங்குள்ள விவசாயிகள் பொங்கலூரில் அமைய இருக்கும் குளிர்பதன கிடங்கை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.

கருத்தரங்கில் மண் மற்றும் பயிர் மேலாண்மை இயக்குனர் ஜெயராமன், நீர்நுட்ப மைய இயக்குனர் செல்லமுத்து, மான்சாண்டோ இந்தியா லிட் சரக மேலாளர்கள் ராஜா, ராஜசேகர், காய்கறித்துறை பேராசிரியர் நடராஜன், தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் குமார், இயற்கை வள மேலாண்மை சிறப்பு அலுவலர் அப்பாவு, ஆழியாறு தென்னை ஆராய்ச்சி மைய தலைவர் ராஜமாணிக்கம் மற்றும் பலர் பேசினார்கள்.

இதில் கோவிந்தாபுரம் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், பாசன சங்க தலைவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பசுமை கிராம அரிமா சங்க செயலாளர் பிரதீப் நன்றி கூறினார்.

## நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு: மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்தது தண்ணீர் திறப்பும் குறைக்கப்பட்டது

ஆத்தூர், ஆக.2–

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் நேற்று ஒரு அடி உயர்ந்தது. மேலும், தேவை குறைந்ததால் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரின் அளவு 4 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

*தண்ணீர் திறப்பு*

*மேட்டூர் அணையில் இருந்து ஆடி பெருக்கு விழா மற்றும் டெல்டா பாசனத்திற்காக கடந்த மாதம் 28–ந் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. முதலில் 6 ஆயிரம் கனஅடியாக திறக்கப்பட்ட தண்ணீர் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு முடிவில் வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியாக வெளியேற்றப்பட்டது.*

*இதற்கிடையே, கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்தது. இதன் காரணமாக அந்த மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து, அணை நிரம்பும் நிலையை எட்டியுள்ளன. இதையடுத்து பாதுகாப்பு கருதி அந்த அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.*

*நீர்வரத்து அதிகரிப்பு*

*கடந்த 29–ந் தேதி கபினி அணையில் இருந்து வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடி வீதமும், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து 3 ஆயிரம் கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டது. இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு நேற்று முன்தினம் காலை கபினி அணையில் இருந்து 23,600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் கடந்த 3 நாட்களுக்கு முன்பு மேட்டூர் அணையை அடைந்தது. அப்போது அணைக்கு 6 ஆயிரம் கனஅடி நீர் வந்தது. இது நேற்று முன்தினம் மாலை வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. நேற்று மாலை 4 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.*

*ஒரு அடி உயர்ந்தது*

*தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதாலும், தண்ணீர் திறப்பைவிட வரத்து அதிகமாக இருந்ததாலும் மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை 81 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் ஒரு அடி அதிகரித்து 82.20 அடியாக உயர்ந்தது.*

*இதற்கிடையே, டெல்டா பாசன பகுதிகளில் தண்ணீர் தேவை குறைந்து உள்ளதால் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் நேற்று மாலை வினாடிக்கு 4 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. நீர் திறப்பு குறைக்கப்பட்டு உள்ளதால், மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி

*குன்னூர், ஆக.2–*

*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் உள்நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்காததால் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை வீழ்ச்சி அடைந் துள்ளது.*

*தேயிலை தூள் ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் குன்னூர் தேயிலை ஏல மையத் தில் தேயிலை ஏலம் நடை பெற்று வருகிறது. விற்பனை எண் 30–க்கான ஏலம் கடந்த 29, 30 ஆகிய தேதிகளில் நடை பெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 92 ஆயிரம்*

*கிலோ தேயிலை தூள் வந்தது.*

*இதில் 11 லட்சத்து 51 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 5 லட்சத்து 41 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஏலத்தில் ஏற்றுமதியாளர்களை பொறுத்த வரை பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாட்டு வர்த்தகர்கள் குறைந்த அளவு தேயிலை தூளை வாங்கினர்.*

*விலை வீழ்ச்சி*

*உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாமல் இருந்தது. இதனால் தேயிலை தூளுக்கு 2 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாத காரணத்தால் 40 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*

*சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 150 ரூபாயும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை 180 ரூபாயாகவும் இருந்தது. இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 34 ரூபாயில் இருந்து 39 ரூபாய் வரையிலும், உயர்விலை தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 120 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரக தேயிலை தூள்*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 34 ரூபாயில் இருந்து 40 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 140 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 31–க்கான ஏலம் வருகிற 5, 6 ஆகிய தேதி களில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 15 லட்சத்து 80 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வருகிறது.*

# மருந்து அடிக்கும் பணி



நீலகிரி மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் பருவ மழை காரணமாக காய்கறிகள் பயிரிடுவதில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஊட்டியில் ஒரு விவசாயி தனது நிலத்தில் பயரிடப்பட்டுள்ள முட்டைகோஸ் செடிகளை நோய் தாக்காமல் இருக்க மருந்து அடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த காட்சி.